9th November 1961]

No scheme for the Golden Rock Panchayat has been received so far.

(b) Two schemes have been sanctioned in 1948 and 1950 and the third Scheme received on 13th October 1958 was returned to the Commissioner, Tiruchirappalli Municipality, for carrying out modification suggested by the Director of Town-Planning. This was re-submitted on 24th October 1959. It has been referred to the Collector of Tiruchirappalli for remarks which are awaited.

(c) A statement [a] is placed on the table of the House.

Satyagraha notice from Agriculturists

***1941 Q.—Sri V. K. KOTHANDARAMAN :**
Sri S. R. MUNUSAMI : } கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட ரிபப்ளிகன் பார்ட்டி தலைவர் மூலம் 28—7—1961 தேதியிட்ட விவசாயிகள் சத்தியாக்கிரக நோட்டீஸ் சர்க்காருக்குக் கிடைத்துள்ளதா?

(இ) சத்தியாக்கிரக நோட்டீஸ் வாதத்தின் அம்சங்கள் யாவை?

(உ) சத்தியாக்கிரக நோட்டீஸ் சம்மந்தமாகச் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes.

(இ) (i) Lands under the sivoijama occupation of landless poor persons should be assigned to them;

(ii) Forest lands which are cultivable should be assigned to landless poor persons at the rate of 5 acres; and

(iii) Deprssed Classes should be assigned the lands reserved for them.

(உ) The points raished in the notice have been examined and a suitable reply has been given.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிற ஹரிஜன மக்கள் பல ஆண்டு காலமாகவே கேட்டு வருகிறார்கள். பல ஆண்டு காலமாகவே பரிசிலனை செய்கிறோம் என்றுதான் பதில் சொல்லப்பட்டு வருகிறது. அப்படி பரிசிலனை செய்து ஒன்று கொடுக்க முடியும் அல்லது முடியாது என்பதைச் சொல்லுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது பற்றியாவது சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த நிலம் வழங்குவதிலே ரொம்பவும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஸ்பெஷலாக ஸ்டாஃபெல்லாம் நியமிக்க ஏற்பா

---

[a] Printed as Appendix VI on pages 117-118 infra.

[9th November 1961

டாகியிருக்கிறது. இதில் என்ன கஷ்டம் என்றால் கொடுக்கக் கூடாத நிலத்தையே கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள்—அதாவது டாங்க் பெட், சானெல் புறம்போக்கு இவைகளைக் கேட்கிறார்கள். முதலில் இல்லை என்றாலும் திரும்பவும் அதையே கேட்கிறார்கள். மற்றப்படி சல்லிசாகக் கொடுக்கக்கூடிய நிலத்தில் தாமதம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, did the threatened Satyagraha movement fructify and if so, what were the repercussions?

THE HON. SRI M. A. MANICKAVELU : There were no repercussions as it did not fructify.

SRI S. R. MUNUSAMI : ஸார், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற டி.ஸி. புறம்போக்கு நிலங்களில் சென்னசமுத்திரம் போன்ற இடங்களில் நிலத்திலே வேலம் விதைகளை விதைத்து வருகிறார்களே பஞ்சாயத்திலே, அதெல்லாம் ஆட்சேபணைக்குரியதா என்பதைச் சர்க்கார் தெரிந்து அதன் மீது நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஒரு தனிப்பட்ட விஷயம். இதைப்பற்றி குறிப்பாக எழுதி அனுப்பினால் அல்லது என்னிடம் சொன்னால் விசாரிக்கிறேன். பொதுவாக ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஹரிஜனங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஒதுக்கப்படாத நிலம் ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

Old age Pension

* 1942 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to grant old age pension for persons above 55?

THE HON. SRI C. SUBRAMANIAM : A scheme for the grant of pension to old and destitute persons is under the consideration of the Government.

* 1943 *Q.*—SRI T. T. DANIEL :
SRI M. P. SARATHI : } Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have decided to bring in legislation in regard to the payment of old-age pension for those above 60 years of age?

THE HON. SRI C. SUBRAMANIAM : The attention of the Member is drawn to the answer to question No. 1942 (Starred) by Sri A. A. Rasheed, M.L.A.

* 1944 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வயோதிகர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் உத்தேசமுண்டா?

(இ) விவரமென்ன?